BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# முன்னெப்போதும் இருந்திராத வாகன நிறுத்த இடம் அமைப்பதற்கான முதலாவது திட்டத்தை ப்ராம்ப்ட்டன் நகரம் உருவாக்கி வருகிறது

***குடியிருப்புவாசிகள், வியாபார அமைப்புக்கள் மற்றும் வளர்ச்சியில் பங்குபெறும் உள்ளூர்க்காரர்கள் பின்னூட்டக் கருத்து வழங்க அழைக்கப்படுகிறார்கள்***

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 5, 2022) –ப்ராம்ப்ட்டன் நகரம் வேகமாக வளர வளர, நகரம் முழுவதும் மக்கள் நடமாடும் விதம் மாறிக்கொண்டே வருகிறது. உள்கட்டமைப்புத் திட்டமிடலை மேம்படுத்தவும், வாகன நிறுத்த வளங்களை நிர்வகிக்கவும், குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்களின் எதிர்காலத் தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும், ப்ராம்ப்ட்டன் நகரமானது, நகரெங்கும் முன்னெபோதும் இருந்திராத வகையிலான  முதலாவது வாகன நிறுத்த இடத்திற்கான மதிப்பாய்வை நடத்துகிறது.

கட்டுபடியாகும் வகையிலான வீடுகள், மேம்பாட்டு செலவுகள் மற்றும் நில பயன்பாட்டு திட்டமிடல் ஆகியவற்றின் மீது வாகன நிறுத்த இடத்திற்கான தேவைப்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அனைத்து சாலைப் பயனாளிகளின் தேவைகளையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு உரிய இடவசதியை உறுதி செய்யும் வகையில் இந்த திட்டம் அமையும்; மேலும் முழுமையான, ஆரோக்கியமான, நடந்து சென்று அடையக்கூடிய  சமூகங்களை உருவாக்க, குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்களின் தேவைகளுடன் சிறப்பாகச் ஒருமித்துச் செல்லும் வகையில் இந்தத் திட்டம் உதவும்.

இந்தச் செய்முறையின் மூலமாக, தற்போதைய சவால்கள் மற்றும் வாய்ப்புகளை நகரம் மதிப்பாய்வு செய்யும், மேலும் பிற ஆளுமை அதிகார எல்லைகளில் சிறந்த குறிகாட்டிகளைக் அமைக்கும். ப்ராம்ப்ட்டன் வாகன நிறுத்த இடத்திற்கான திட்டம் எதிர்காலத்திற்கான கொள்கைகள் மற்றும் திறமையான வாகன நிறுத்த  மேலாண்மை குறித்த வழிகாட்டுதல் கொள்கைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும்.

**ப்ராம்ப்ட்டன் வாகன நிறுத்த இடங்களுக்கான திட்டத்தை உருவாக்குதல்**
இந்த திட்டத்தின் முதல் கட்டமானது, வாகனம் நிறுத்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் நகரத்தின் பரந்த பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளுக்கு இடையேயான இணைப்புகளை மதிப்பாய்வு செய்து தொலைநோக்குப் பார்வை மற்றும் கொள்கைக்கான கட்டமைப்பை உருவாக்குகிறது.

அதன் இரண்டாம் கட்டத்தில், நகரத்திற்குள் வாகன நிறுத்த இடத்திற்கான வணிக மற்றும் நிதி மாதிரிகளுக்கான பரிந்துரைகள் மதிப்பாய்வுக்காக சமர்ப்பிக்கப்படும்.

முன்னெப்போதும் இருந்திராத முதலாவது வாகன நிறுத்த இடத்திற்கான உத்திக்கு ஆதரவளிக்க, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஐபிஐ (IBI) குழுமத்தை ஈடுபடுத்தியுள்ளது. இந்த திட்டமானது, ப்ராம்ப்ட்டன் நகர திட்டமிடல் மற்றும் ஹவுசிங் ப்ராம்ப்ட்டன் அமைப்பு உள்ளிட்ட பிற தற்போதைய உத்திகளுடன் ஒருமித்துப் போகும்.

**உங்கள் கருத்தைக் கூறுங்கள்**
இதற்கான ஆய்வு பற்றி மேலும் அறிந்து கொள்ள ஜனவரி 13, வியாழக்கிழமை மாலை 6- மணி முதல் 8 மணி வரை நடைபெறவிருக்கும் ஒரு ஆன்லைன் ஈடுபாட்டு அமர்வில் பங்கேற்க, குடியிருப்புவாசிகள் மற்றும் வியாபாரிகள் உள்ளிட்ட வளர்ச்சிப் பங்கேற்பாளர்கள், லாப நோக்கில்லாத குழுக்கள், மற்றும் வாடகைக் கார் மற்றும் லாரி தொழில் உரிமையாளர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஆன்லைன் கருத்தாய்வுகளும் கூட ஜனவரி 28 வரை கிடைக்கப்பெறும்.
இந்த நிகழ்ச்சிக்கு பதிவு செய்துகொள்ள, கருத்தாய்வினை பூர்த்தி செய்து மேலும் கற்றுக்கொள்ள வருகை புரியவும்: brampton.ca/parkingplan

**அறிஞர் கூற்றுக்கள்**

"சமீபத்திய வருடங்களில், ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து அம்சமானது அதிக தீவிரத்தைக் கண்டுள்ளது மற்றும் போக்குவரத்து பயணிகள் எண்ணிக்கை வகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நாம் வளர்ச்சிக்காக முன்னோக்கிச் செல்லும்போது, நமது சாலைகள் தற்போது எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும், எதிர்காலத்தை எவ்வாறு சிறப்பாகத் திட்டமிடலாம் என்பதையும் புரிந்துகொள்வதற்கு, வளர்ச்சிக்கான பங்குதாரர்களுடன் நாம் ஈடுபடுவது முக்கியம். இவ்வாறு ஈடுபடுதலுக்கான இந்த அமர்வில் பங்கேற்குமாறு அனைவரையும் ஊக்குவிக்கிறேன்; மாறாக எங்கள் கருத்துக்கணிப்பை நிரப்பியும் கூட இந்தச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் வாகன நிறுத்த இடத்திற்கான திட்டம் எதிர்காலத்திற்கான ஒரு உத்தியை உருவாக்கத் தேவையான தகவல்களை நமக்கு வழங்கும். ப்ராம்ப்ட்டன் தொடர்ந்து வளர்ச்சியடைந்து முன்னேறும்போது வாகன நிறுத்த இடத்திற்கான திட்டம் எவ்வாறு பரிமாணம் பெறும் என்பதைத் திட்டமிடுவதில் எங்களுக்கு உதவ, அனைத்து குடியிருப்பாளர்களையும் வளர்ச்சிப் பங்குதாரர்களையும் இந்தச் செயல்பாட்டில் பங்கேற்குமாறு நாங்கள்கேட்டுக்கொள்கிறோம்.

*-மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், திட்டமிடல் மற்றும் மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரின் வாகன நிறுத்த இடத்திற்கான திட்டமானது, வாகன நிறுத்தம் செய்வதற்கான வாய்ப்புகளை இனம் கண்டு, சிறந்த, திறமையான முறையில் திட்டமிடத் தேவையான தகவல்களை எங்களுக்கு வழங்கும். எங்கள் நகராட்சி கூட்டாளிகள் மற்றும் சமூக உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், ப்ராம்ப்ட்டனின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு முழுமையான அனைத்தும் அடங்கிய திட்டத்தை நாங்கள் உருவாக்க முடியும்.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**

BRAMPTON

**Media Release**

ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca